**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10022025-9822

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.09.2025

Accepted: 27.09.2025

Published: 01.10.2025

Citation:
Shanmugavadivel, P., & Sankara Narayanan, K. (2025). Literacy Development in Tamil Nadu from the Perspective of Social and Educational Research. *Shanlax International Journal of Tamil Research, 10*(2), 79–85.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9822

*Corresponding Author:
shanmugavadivel2000@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Literacy Development in Tamil Nadu from the Perspective of Social and Educational Research

**P. Shanmugavadivel**
*Ph.D. Research Scholar*
*Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai*
*https://orcid.org/0009-0001-7698-5964*

**Dr. K. Sankara Narayanan**
*Assistant Professor & Head of the Department*
*Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai*
*https://orcid.org/0000-0002-6260-8164*

**Abstract**
*Literacy is an important tool for the progress of human society. Literacy is a fundamental part of society. Since writing is a tool for sharing information, the development of literacy in society is very important. Writing and literacy in Tamil Nadu have been witnessing great development since the Sangam period till date. All sectors like education, industry, social progress are intertwined with literacy. This article examines the development of writing, literacy in Tamil Nadu, its importance and the government's measures for the development of literacy.*

***Keywords:*** *Tamil, Writing, Tamil Nadu, Literacy, Sangam Literature, Society, Educational Development*

**References**

1. Government of India Census Reports, 2011.
2. Literacy Rate of Indian Population, National Statistical Office (NSO), 2023.
3. Govendhan. T, Origin and Development of Tamil Writing, Veman Publishing House, 2005.
4. International Education and Development Reports (https://ta.wikipedia.org/wiki/%E0%AE%8E%E0%AE%B4%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B5%E0%AF%81, n.d.)
5. Sarangapani. I, Paripadal Moolamum Uraiyum, Varthamanan Edition, 2022.
6. Subramaniyam. S.V, Paththuppaattu Moolamum Uraiyum, Varthamanan Edition, 2022.
7. Namakkal kavinyar, Thirukkural, Poompuhar Publishing House, 2010.
8. Tamizhannal, Akananuru Moolamum Uraiyum, Varthamanan Edition, 2022.
9. Tamizhannal, Ainkurunuru Moolamum Uraiyum, Varthamanan Edition, 2022.
10. Balasundaram. S., Tolkappiyam, Economics Research Kandigaiyurai, Periyar University Publication, 2012.
11. Venkatasaami Nattar Na. Mu., Silappathikaram Moolamum Uraiyum, Gowra Publications, 2011.

# சமூகம் மற்றும் கல்வியியல் ஆய்வு நோக்கில் தமிழ்நாட்டில் எழுத்தறிவு வளர்ச்சி

***பெ. சண்முகவடிவேல்***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***முனைவர் கி. சங்கர நாராயணன்***
உதவிப் பேராசிரியர், துறைத்தலைவர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**ஆய்வுச் சுருக்கம்**

*எழுத்தறிவு என்பது மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கான முக்கியமான கருவியாக விளங்குகிறது. எழுத்தறிவு சமூகத்தின் அடிப்படை அங்கமாக உள்ளது. எழுத்து என்பது தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் கருவியாக இருப்பதால், சமூகத்தில் எழுத்தறிவின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதாகும். தமிழ்நாட்டில் எழுத்தும் எழுத்தறிவும் சங்ககாலம் தொட்டு இன்றுவரை மிகுந்த வளர்ச்சியினைக் கண்டு வருகிறது. கல்வி, தொழில், சமூக முன்னேற்றம் என அனைத்து துறைகளும் எழுத்தறிவுடன் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தக் கட்டுரை, சமூகம் மற்றும் கல்வியியல் ஆய்வு நோக்கில் தமிழ்நாட்டில் எழுத்து, எழுத்தறிவின் வளர்ச்சி, அதற்கான முக்கியத்துவம் மற்றும் எழுத்தறிவின் வளர்ச்சிக்கான அரசின் நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குறித்து ஆராய்கிறது.*

***திறவுச் சொற்கள்:*** *தமிழ், தமிழ்நாடு, எழுத்து, எழுத்தறிவு, சங்க இலக்கியம், சமூகம், கல்வி வளர்ச்சி*

## முன்னுரை

தமிழர் எழுத்து மரபு மிகப் பழமையானது. எழுத்து என்பது வெறும் கருவி மட்டும் அல்ல; அது அறிவை நிலைநிறுத்தும் கருவியாகவும், பண்பாட்டைப் பரப்பும் ஊடகமாகவும், சமூகத்தைக் கட்டமைக்கும் ஆதாரமாக விளங்குவது. சங்ககாலம் முதல் இன்றைய கல்விக் கொள்கைகள் மற்றும் அரசுத் திட்டங்களால் தமிழ்நாட்டின் எழுத்தறிவு இந்திய அளவில் முன்னணியில் உள்ளது. எழுத்தறிவு சமூக நலன், தொழில் வாய்ப்புகள் மற்றும் மக்களின் ஒட்டு மொத்த முன்னேற்றத்தில் முக்கியப் பங்காற்றுகிறது. எழுத்தறிவின் வரலாறு, எழுத்தறிவின் தற்போதைய நிலை, எழுத்தறிவின் முக்கியத்துவம், எழுத்தறிவை மேம்படுத்த அரசின் திட்டங்கள் மற்றும் எழுத்தறிவை அதிகரிக்க எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

## தமிழ்நாட்டில் எழுத்தறிவின் வரலாறு

தமிழ்நாட்டில் எழுத்திற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ் எழுத்து பண்டைய காலத்தில் தொடங்கி வளர்ச்சி பெற்று கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், இலக்கிய நூல்கள், அச்சுக்கலை மற்றும் கல்வி

முறைகளின் மூலம் பரவியது. எழுத்தறிவின் மூலமாகவே தமிழர்களின் இலக்கியமும் பண்பாடும் நாகரிகத்தின் உச்சம் தொட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் தமிழின் உயர்ந்த நிலையைப் பிரதிபலிக்கின்றன. சங்க காலத்தில் அறிஞர்கள் மட்டுமல்லாது சாமானிய மக்களும் எழுத்தை வளர்த்துள்ளனர்.

***தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்தில் சிறப்புப் பாயிரம் தொல்காப்பியரை,***
***செந்தமிழ் இயற்கைச் சிவணிய நிலத்தொடு***
***முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்***
***புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல்;***
***மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி***
***(தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம்)***

எனக் கூறுகிறது. அதாவது, செந்தமிழ் இயற்கையாக வழங்கும் பகுதியில் இதற்கு முன்பாக வந்த நூல்களையெல்லாம் கற்று, முறையாகத் தம் அறிவால் நூலைத் தொகுத்து, ஒலிப்பிலும் எழுத்திலும் மயங்காத மரபைக் கொண்ட தமிழ் மொழியின் மரபைத் தொல்காப்பியத்தின்வழி புலப்படுத்தியவர் தொல்காப்பியர் எனச் சிறப்பிக்கிறார். இதன்வழி தொல்காப்பிய காலத்திற்கு முன்பாகவே எழுத்தும் எழுத்தறிவும் பரவி இருந்ததை அறிய முடிகிறது.

மேலும், தொல்காப்பியத்தின் முதல் அதிகாரமே "எழுத்தென படுப" எனத் தொடங்கி எழுத்துகளின் பிறப்பு, அமைப்பு மற்றும் அவற்றின் வகைகளைப் பற்றி விவரிக்கிறது. சங்க இலக்கியம் எழுத்துடை நடுகல், கண்ணெழுத்து, சித்திர எழுத்து, எழுத்து நிலை மண்டபம், தொய்யில் எழுத்து எனப் பல்வேறு எழுத்து நிலைகளை எடுத்துக் கூறுகிறது.

நடுகல்லில் இறந்த வீரனுடைய பெயரும் புகழும் எழுதப்பட்டிருந்ததால் "எழுத்துடை நடுகல்" எனப்பட்டது. ஓதலாந்தையார் யானையின் தும்பிக்கைச் சொர சொரப்பை எழுத்துக்கள் பொறித்த நடுகல்லுடன் பின்வருமாறு ஒப்பிடுகிறார்.

***விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்***
***எழுத்துடை நடுகல் அன்ன விழுப் பிணர்ப்***
***பெருங்கை யானை இருஞ்சினம் உறைக்கும்***
***வெஞ்சுரம் அரிய என்னார்***
***வந்தனர் தோழிநம் காத லோரே.***
***(ஐங்குறுநூறு : 352, 1-3)***

தோழியே! நம் தலைவன் வரும் வழியில் நடுகல்லானது தப்பாது தாக்கும் வில் வீரர்களால் கொல்லப்பட்டு வீர மரணம் அடந்த வீரர்களின் நினைவாக நடப்பட்டது. அதன் மேல், இறந்த வீரனின் பெயரும் பெருமையும் செதுக்கப்பட்டிருக்கும். அந்த நடுகல்லைப் போன்ற சொரசொரப்புப் பொருந்தியது யானையின் கை என்று யானையின் தும்பிக்கைச் சொரசொரப்பை எழுத்துக்கள் பொறித்த நடுகல்லுடன் ஒப்பிட்டு பதிவுச் செய்துள்ளார். இதன்வழி அக்கால மக்கள் எழுத்தை எந்த அளவிற்கு அறிந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது. கண்ணெழுத்தை "குயில் எழுத்து" என்று அகநானூற்றில் மதுரை மருதன் இளநாகனார் பின்வருமாறு கூறுகிறார்.

***இருங்கவின் இல்லாப் பெரும்புன் தாடி***
***கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென***
***மருங்குல் நுணுகிய பேஎம் முதிர் நடுகல்***
***பெயர் பயம் படரத் தோன்று குயில் எழுத்து***
***இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்***
***ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்***
***(அகநானூறு: 297)***

நடுகல்லில் வீரன் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. அதில் வீரனின் பெயரும், அவனால் விளைந்த பயனும் குழிந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும். கல்லின் மீது கூரிய உளியைக் கொண்டு செதுக்கிய எழுத்தையே குயில் (குயின்ற) எழுத்து என்று குறிப்பிடுகிறது.

மதுரை மருதன் இளநாகனார் பாலை நிலத்தில் எழுத்துப் பொதிந்த நடுகல்லைப் பற்றி விவரிக்கின்றார்.

***மரம் கோள் உமண்மகன் பெயரும் பருதிப்***
***புன்தலை சிதைத்த வன்தலை நடுகல்***
***கண்ணி வாடிய மண்ணா மருங்குல்***

**கூர் உளி குயின்ற கோடு மாய் எழுத்து**
**(அகநானூறு : 343)**

உப்பு வணிகரின் மாட்டு வண்டியின் சக்கரம் வலுவான நடுகல்லின் மெல்லிய மேல் பகுதியைச் சிதைத்து விட்டது. மாலை வாடி நடுகல் கழுவப்படாமல் உள்ளது. கூர்மையான உளியால் அதன் மீது செதுக்கிய எழுத்துக்கள் அழிந்து விட்டன. இங்கு நடுகல்லில் எழுதப்பட்ட எழுத்துக்கள் அழிந்துவிட்டன என்று மருதன் இளநாகனார் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

**ஒண்சுடர் ஓடைக்களிறு ஏய்க்கும் நின் குன்றத்து**
**எழுது எழில் அம்பலம் காமவேல் அம்பின்**
**தொழில் வீற்றிருந்த நகர்;**
**இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்**
**துன்னுநர் சுட்டவும், சுட்டு அறிவுறுத்தவும்**
**(பரிபாடல்: 18:27-29)**

என்ற பரிபாடல் வரிகள் எழுது எழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம் ஆகிய சொற்கள் வரைதல், செதுக்குதல், பொறித்தல் என எழுத்து நிலைகளைக் குறிக்கிறது. அதாவது, ஓவியம் வரைதலையும் சிலை வடித்தலையும் எழுதுதல் என்ற சொல்லால் குறிக்கப் பட்டதை அறிய முடிகிறது.

மலைபடுகடாம் என்ற ஆற்றுப்படை நூலில் ஒரு பாணர் இன்னொரு பாணருக்கு நன்னன் என்ற குறுநில மன்னனின் நாட்டுக்குச் செல்லும் வழியைப் பற்றிக் கூறும்போது நடுகற்களைப் பற்றியும் அதில் எழுதியுள்ள பெயர்களைப் பற்றியும் பின்வருமாறு கூறுகின்றார்.

**ஒன்னார்த் தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென**
**நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்**
**செல்லா இல்இசைப் பெயரொடு நட்ட**
**கல் ஏசு கவலை எண்ணு மிகப் பலவே**
**இன்புறு முரற்கை நும் பாட்டு விருப்பு ஆக**
**(மலைபடுகடாம் : 386 - 391)**

இந்த வழியில் நீங்காத பெரும் புகழுடைய வீரர்களின் பெயர்களோடு நடுகற்கள் பல உண்டு. வளைந்த தொன்றுத் தொட்டு வழங்கும் மரபு முறைப்படி உங்கள் யாழை இயக்கி, நடுகற்களை வணங்கி விட்டு நீங்கள் செல்லுங்கள் என பெருங்குன்றூர் பெருங்கௌசிக்கனார் எழுத்தைப் பாடியுள்ளார்.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**
**(திருக்குறள் 392)**

எண்ணும் எழுத்தும் இவ்வுலகில் வாழும் மக்களுக்குக் "கண்கள்" என்பதில் வள்ளுவர் எழுத்தை அறிவுக்கண்ணாகப் போற்றியுள்ளார். மேலும், சிலப்பதிகாரக் காட்சிக் காதையில்,

**மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்**
**கடவுள் எழுத ஓர் கல் தாரான் எனின்**
**வழிநின்று பயவா மாண்பில் வாழ்க்கை**
**(சிலப்பதிகாரம் 129-131)**

என்ற வரிகள் கல்லில் செதுக்குவதையும் பொறிப்பதையும் வரைவதையும் எழுத்து என்றே பதிவு செய்திருக்கிறது.

இவ்வாறு, சங்க காலத்தில் அரசன் முதல் சாமானியன் வரை எழுத்தை அறிந்திருந்தனர் என்பதைத் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. மேலும், தமிழ் மக்கள் எழுத்தறிவு பெற்ற சமூகமாக வாழ்ந்ததை அரிக்கமேடு, கரூர், கொடுமணல், கீழடி போன்ற இடங்களில் நடந்த அகழ்வாய்வுகளில் கிடைத்த எழுத்துக் கீறல்கள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

சங்க காலத்திற்குப் பின் களப்பிரர், பல்லவர், சோழர், பாண்டியர், சேரர் மற்றும் பல வேற்றரசுகளிலும் தமிழ்க் கல்வி வெகுவாக வளர்ந்தது. பிறகு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மேம்பட்ட கல்விமுறை அறிமுகமானது. இந்தியா விடுதலை பெற்ற பின்னர் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி

பெற்றதோடு எழுத்தறிவும் பெருமளவில் முன்னேறியுள்ளது. அரசு கல்விக் கொள்கைகள், இலவச கல்வி, கல்வித் தரம் உயர்வு ஆகியவை எழுத்தறிவை மேம்படுத்தியுள்ளன. தற்போது அறிவியல் தொழில்நுட்பத்தினால் மேலும் வளர்ச்சி பெற்று வருகிறது.

## எழுத்தறிவின் தற்போதைய நிலை

இருபதாம் நூற்றாண்டிற்கு பிறகு தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி உயர்ந்த போதிலும், எழுத்தறிவு வீதத்தில் ஊரக மற்றும் நகரப்பகுதிகளில் வித்தியாசம் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (UNESCO) எழுத்தறிவைப் பின்வருமாறு வரையறுத்துள்ளது.

எழுத்தறிவு என்பது அச்சிடப்பட்ட அல்லது எழுதப்பட்ட கருத்துகளைக் குறிப்பிட்டுள்ள கருத்துடன் பொருந்தி இனம் காணல், புரிதல், விளக்குதல், புதியன புனைதல், தகவல் பரிமாற்றம் செய்தல், கணித்தல் ஆகியவற்றின் தொகுப்பாகும். இது தொடர் கற்றல் நிகழ்வு ஆகும். ஒவ்வொருவரும் தம் இலக்கை அடைவதற்கான கருவியாகும். எழுத்தறிவானது ஒருவர் தன் அறிவையும் திறனையும் வளர்த்துக் கொண்டு, அண்மைச் சமூக நிகழ்வுகளில் பங்கேற்று விரிந்த சமுதாயம் வளர்ச்சி பெறுதலை உள்ளடக்கியதாகும்

இதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் எழுத்தறிவு விகிதம் குறித்த அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டின் எழுத்தறிவு விகிதம் (%)**
**1951 முதல் 2023 வரை**

| ஆண்டு | தமிழ்நாட்டின் எழுத்தறிவு விகிதம் (%) |
|---|---|
| 1951 | 20.86% |
| 1981 | 54.39% |
| 2001 | 73.47% |
| 2011 | 80.09% |
| 2023 (மதிப்பீடு) | 82.09% |

தமிழ்நாட்டில் 2011 கணக்கெடுப்பின்படி ஆண்களின் எழுத்தறிவு வீதம் சுமார் 86.77% மற்றும் பெண்களின் எழுத்தறிவு வீதம் 73.44% ஆக மொத்த எழுத்தறிவு விகிதம் 80.09% உள்ளது. இது பெண்களின் கல்வி வளர்ச்சியையும், எதிர்காலத்தில் இதை மேம்படுத்த தேவையான முயற்சி களையும் முன்வைக்கிறது.

தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) 2023 ஆம் ஆண்டு மதிப்பீட்டு அடிப்படையில் நடத்திய கணக்கெடுப்பில் தமிழ்நாட்டின் எழுத்தறிவு விகிதம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டின் எழுத்தறிவு விகிதம்**
**(NSO) - 2023**

| ஆண் எழுத்தறிவு விகிதம் | பெண் எழுத்தறிவு விகிதம் | சராசரி எழுத்தறிவு விகிதம் |
|---|---|---|
| 87.9 % | 77.9% | 82.9% |

## எழுத்தறிவின் முக்கியத்துவம்

### சமூக முன்னேற்றம்

எழுத்தறிவு உள்ள மக்களிடையே இன, மத வேறுபாடுகள் குறைந்து சமத்துவம் ஏற்படுகிறது. பெண்கள் கல்வி பெற்று குடும்ப மற்றும் சமூக நலத்திற்காகப் பங்களிக்கின்றனர். மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று ஜனநாயக முறையில் சமூகத்தில் முன்னேற உதவுகிறது.

### பொருளாதார வளர்ச்சி

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எழுத்தறிவு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. எழுத்தறிவு விகிதம் அதிகரிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. தொழில் முனைவோர் எண்ணிக்கை உயரும்.

மேலும், தொழில்நுட்ப அறிவு மேம்பட உதவுகிறது.

### சுகாதார வளர்ச்சி

மருத்துவம், சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு எழுத்தறிவினால் ஏற்படுகிறது. இதனால், மக்கள் அரசின் மருத்துவத் திட்டங்களை எளிதில் அறிந்து பயன் அடைவதால் இறப்பு விகிதம் குறையும்.

### எழுத்தறிவை மேம்படுத்த அரசின் திட்டங்கள்

தமிழ்நாட்டின் அரசியல் மற்றும் கல்வி சார்ந்த அமைப்புகள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் எழுத்தறிவில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். குறிப்பாக, தமிழ்நாடு அரசு பல்வேறு கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1. அனைவருக்கும் கல்வித் திட்டம்
2. சிறுவர்கள் இலவசக் கல்வித்திட்டம்
3. காலை உணவு மற்றும் மதிய உணவு திட்டம் பள்ளிப் போகும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கி கல்வி தொடர்வதற்கு ஊக்கமளிக்கிறது.
4. பெண்களின் கல்விக்கான உதவித் திட்டங்கள்
5. இலவச மிதிவண்டிகள்
6. உதவித் தொகைகள்
7. உயர்கல்விக்கான பொருளாதார உதவிகள்
8. இணையக் கல்வித் திட்டங்கள்

### எழுத்தறிவை அதிகரிக்க எதிர்கால நடவடிக்கைகள்

1. கிராமப்புறங்களில் கூடுதல் பள்ளிகளை அதிகரித்தல்
2. பெண்களின் கல்விக்கான கூடுதல் உதவிகளைச் செய்தல்
3. தன்னார்வ கல்வித் திட்டங்களை ஊக்குவித்தல்
4. கல்வி சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்படுத்துதல்
5. கல்வி மேம்பாட்டிற்கான கொள்கைகளை உருவாக்குதல்
6. புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கல்வி தரத்தை உயர்த்துதல்

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தமிழ்நாட்டில் எழுத்தறிவை மேலும் அதிகரிக்க முடியும்.

### முடிவுரை

எழுத்தறிவு அதிகரிப்பது சமூக மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும். கல்விக்கான அரசு உதவிகள், சமூக மாற்றங்கள், தொழில்நுட்பம் எழுத்தறிவை மேம்படுத்தும் முக்கியமான காரணிகளாக உள்ளன. எழுத்தறிவின் மூலமே நாட்டின் சமூகம், பொருளாதாரம் மற்றும் அறிவியல் முன்னேற்றத்தை அதிகரிக்க முடியும். ஆகவே, எதிர்காலத்தில் 100% எழுத்தறிவு கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முன்னேறுவது நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

### துணைநூல்கள்

1. இந்திய அரசின் மக்கள் கணக்கெடுப்பு அறிக்கைகள், 2011.
2. இந்திய மக்களின் எழுத்தறிவு விகிதம், தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO), 2023.
3. கோவேந்தன். த, தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும், வேமன் பதிப்பகம், 2005.
4. சர்வதேச கல்வி மற்றும் வளர்ச்சி அறிக்கைகள் (https://ta.wikipedia.org/wiki/%E0%AE%8E%E0%AE%B4%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B5%E0%AF%81, n.d.)
5. சாரங்கபாணி. இரா, பரிபாடல் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், 2022.

6. சுப்பிரமணியன். ச. வே, பத்துப்பாட்டு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், 2022.
7. நாமக்கல் கவிஞர் உரை, திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், 2010.
8. தமிழண்ணல், அகநானூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், 2022.
9. தமிழண்ணல், ஐங்குறுநூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், 2022.
10. பாலசுந்தரம். ச, தொல்காப்பியம், பொருளதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பெரியார் பல்கலைக் கழக வெளியீடு, 2012.
11. வேங்கடசாமி நாட்டார் ந. மு., சிலப்பதிகாரம், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், கௌரா பதிப்பகம், 2011.